# மீகா

## தேவனின் தண்டனையும் மீட்பும்

# இந்தப் புத்தகத்தை ஆக்கியோன் குறித்து

- மீகா என்ற பெயரின் அர்த்தம் “கர்த்தரைப்போல யாருண்டு”.
- மீகா என்பது மீகாவேலுக்கு உள்ள மூலச்சொல்லில் இருந்த வந்தது.
- மீகா என்று பெயருள்ளவர்கள் பலர் வேதாகமத்தில் இருந்தாலும் மொரேசா ஊரைச் சேர்ந்தவனாக (1:1) அடையாளப்படுத்தபடுகிறவன் இவன்தான். இந்த ஊரின் முழுப் பெயர் மோர்ஷேத்காத் (1:14). இது எருசலேமிற்கு தென்மேற்க்காக இருபது மைல்கள் தூரத்தில் லாகீஸ் பட்டணத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.
- யூதாவின் ராஜாக்கள் மூவரின் காலத்தில் இவன் தீர்க்கதரிசனம் உரைத்தான்.
    - யோதாம் (கிமு 739-731) - ஆகாஸ் (கிமு 731-715) - எசேக்கியா (கிமு 715-686)
- மீகாவின் சமகாலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள்
    - வடக்கு இராஜ்யத்தில் ஓசியா
    - தெற்கு இராஜ்யத்தில் எருசலேமின் முற்றத்தில் ஏசாயா
- மீகா யூதாவாகிய தெற்கு இராஜ்யத்திற்கே பிரதானமாக தீர்க்கதரிசனம் உரைத்தாலும் இஸ்ரவேலாகிய வடக்கு இராஜ்யத்தின் சமாரியா கவிழ்க்கப்பட்டுப் போகும் என்பதை முன்னுரைத்தான் (1:6)
- மீகாவின் தீர்க்கதரிசன ஊழியத்தை கிமு 735 முதல் 710 வரை 25 ஆண்டுகள் நிறைவேற்றினான்.
    - அதிகாரங்கள் 7
    - வசனங்கள் 105

# மீகா குறித்து ஒரு பார்வை

- மீகா "நகரத்து தீர்க்கதரிசி" என்று அழைக்கப்பட எல்லாவிதத்திலும் தகுதியானவன்

**முதல் மூன்றில் ஒருபகுதி யூதாவின் பாவங்களை வெளியரங்கமாக்குகின்றது.**

- தேவன் தமது ஜனத்திற்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது (3:8) போன்றதுதான் மீகாவின் தீர்க்கதரிசனம். சமாரியாவுக்கும், எருசலேமிற்கும் எதிராக அவர்களது பாவங்களை எடுத்துக்காட்டி குற்றஞ்சாட்டுகிறார் (1:2-7).
- ஜனங்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி தவறான வழிகளுக்கு இட்டுச்சென்றதற்காக ஆட்சியாளர்கள் மீதும், ஆசாரியர்கள் மீதும் தவறான தீர்க்கதரிசிகள் மீதும் குற்றஞ்சாட்டப்படுகிறது.
- அவர்களது செய்கைகளால் எருசலேம் அழிக்கப்படப்போகிறது.

**இரண்டாவது மூன்றில் ஒருபகுதி காத்திருக்கும் தேவனின் தண்டனையை சொல்லுகிறது**

- தேவனுடைய தண்டனையை நிறைவேற்ற அசீரியாவும்(5:5-6) பாபிலோனும் (4:10) தயாராக இருக்கின்றன.

**இறுதியான மூன்றில் ஒருபகுதி தண்டனைக்குப் பின்பு தேவனிடத்தில் இருந்து வரவிருக்கும் நம்பிக்கையையும், மறுசீரமைப்பையும் சொல்லுகிறது**

- மீகா வடக்கு, தெற்கு இராஜ்யங்களின் திட்டவட்டமாள பாவங்களை பட்டியலிடுகிறார்.
- இவற்றில் விக்கிரக வழிபாடு (1:7,5:12-14) நிலங்களை அபகரித்தல் (2:2,9) நிர்வாக தலைமைகளின் சீர்கேடு (3:1-3,9-10,7:3) மதத் தலைவர்களின் பித்தலாட்டம் (3:11) கள்ள தீர்க்கதரிசன ஊழியர்கள் (3:5-7,11) உண்மையான மனந்திரும்புதல் இல்லாத பலிகளும், காணிக்கைகளும் (6:6-7) திருட்டு நிறைந்த வணிகம்,வன்முறை (6:10-12) ஆகியவை சொல்லப்படுகிறது.

# துல்லியமான தீக்கதரிசனங்கள்

1:6-16 - அசீரியா சமாரியாவை அழித்தல்.

கடைசிகால அழிவுக்கான சிறிய காட்சிப்படுத்துதல் (4:11-13)

2:12 - மீதியாயிருப்பவர்கள் சேர்க்கப்படும் எதிகால நிகழ்வு

3:6-7 – தீர்க்கதரிசனங்கள் அற்றுப்போதல்

3:12,4:9,10 – எருசலேமின் அழிவு அசீரியாவினால் அல்ல பாபிலோனால் வரும்

மீகாவினால் எரேமியா வாழ்க்கை பாதுகாக்கப்பட்டது 3:12 (எரே 26:18)

4:1-8 – உலகம் முழுவதின் மேலும் வரப்போகும் இராஜ்யம் (ஒரே உலகம்)

5:2 – கிறிஸ்துவின் பிறப்பு (மத் 2:5-6ல் மேற்கோள் காட்டப்பட்டுளது)

5:7,8 – மீதியாயிருப்பவர்களின் எதிர்கால ஊழியம்

6:6-8 – தேவனின் எதிர்பார்ப்பு

7:18-19 – தேவனின் உண்மையான சுபாவம்

# இயேசுவின் வாழ்க்கையோடு தொடர்புடைய 2 வசனங்கள்

மேசியாவின் பிறப்பை குறித்து 5:2

எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது.

முதல்முறை இயேசு தமது சீஷர்களை பணிசெய்ய அனுப்பியபோது மீகா 7:6ஐ குறிப்பிடுகிறார்

மகன் தகப்பனைக் கனவீனப்படுத்துகிறான்; மகள் தன் தாய்க்கு விரோதமாகவும், மருமகள் தன் மாமிக்கு விரோதமாகவும் எழும்புகிறார்கள்; மனுஷனுடைய சத்துருக்கள் அவன் வீட்டார்தானே.

# மீகா புத்தகத்தின் முக்கிய பகுதிகள்

**I.** அறிமுக உரை 1:1

**II.** யூதா, சமாரியா ஆகியவற்றிற்கான அழிவின் செய்தி 1:2-2:13

A. வரவிருக்கும் தண்டனை குறித்த வெளிப்பாடு 1:2-16

B. வரவிருக்கும் தண்டனைக்கான காரணங்கள் 2:1-13

**III.** அழிவின் செய்தியும் விடுதலையின் செய்தியும் 3:1-5:15

A. அழிவு: வரவிருக்கும் தண்டனை 3:1-12

1. தலைவர்களுக்கான தண்டனை 3:1-4
2. கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கான தண்டனை 3:5-8
3. எருசலேமுக்கான தண்டனை 3:1-4 3:9-12

B. விடுதலை: வரவிருக்கும் இராஜ்யம் 4:1-5:1

1. இராஜ்யத்தின் மகிமை 4:1-8
2. இராஜ்யத்தை தொடர்ந்து வரும் உபத்திரவம் 4:9-5:1

C. விடுதலை: வரவிருக்கும் ராஜா 5:2-15

1. அவரது முதலாம் வருகை 5:2-3
2. அவரது இரண்டாம் வருகை 5:4-15

**IV.** கண்டனத்தின் செய்தி

A. தேவனின் முதலாவது குற்றச்சாட்டு 6:1-5

B. இஸ்ரவேலின் முதலாவது பதில் 6:6-8

C. தேவனின் இரண்டாவது குற்றச்சாட்டு 6:9-16

D. இஸ்ரவேலின் இரண்டாவது பதில் 7:1-10

**V.** முடிவுரை: இஸ்ரவேலுக்கான ஆசீர்வாதம் 7:11-20